உ

ஸ்ரீ ராம ஜெயம்

ஊறை. விஜயராகவப் பிள்ளை
திருவாய் மலர்ந்தருளிய

# குருபரம்பரைப் புராணம்

(அணிந்துரை மற்றும் முன்னுரை)

பதிப்பாசிரியன்
கல்விக்கடல்
S. K. இராமராஜன்
( கம்பராமன் )

பொறுப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை
1994

விலை :

உ

ஸ்ரீ ராம ஜெயம்

ஊறை. விஜயராகவப் பிள்ளை

திருவாய் மலர்ந்தருளிய

# குருபரம்பரைப் புராணம்

## (அணிந்துரை மற்றும் முன்னுரை)


பதிப்பாசிரியன்

கல்விக்கடல்

**S. K. இராமராஜன்**

(கம்பராமன்)



பொறுப்பாசிரியர்

நடனா. காசிநாதன், எம்.ஏ.,

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை



வெளியிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை

1994

முதற் பதிப்பு-1994 (1000 பிரதிகள்)
த. நா தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 123

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

குருபரம்பரைப் புராணம்

பதிப்பாசிரியன்
கல்விக்கடல்
S.K. இராமராஜன்
(கம்பராமன்)

பொறுப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.,

விலை : ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# அணிந்துரை

குருபரம்பரைப் புராணம் என்பது வைணவ ஆச்சாரியார்களின் வரலாறுகளைக் கூறும் நூலாகும். இதனைக் ''குருபரம்பரா ப்ரபாவம்'' எனவும் அழைப்பர். குருபரம்பரைப் புராணம் என்னும் நூலைப் பின்பழகிய பெருமாள் ஜீயர் என்னும் பெரியார் இயற்றி அருளியிருக்கிறார். அவரையொட்டி பல ஆச்சாரியார்கள் குருபரம் பரைப் புராணத்தை எழுதியிருக்கிறார்கள். அவ்வகையில் இது வரை ஏழு நூல்கள் கிடைத்துள்ளதாக சைவப்பெரும் புலவரும் தமிழ் இலக்கிய வரலாற்றின் தந்தையுமான திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் ''தமிழ் இலக்கிய வரலாறு (13-ஆம் நூற்றாண்டு)'' என்னும் நூலில் பட்டியலிட்டு தந்திருக்கிறார்கள். தற்பொழுது இத்துறையால் வெளியிடப் பெறும் ''குரு பரம்பரைப் புராணம்'' அவ்வரிசையில் எட்டாம் நூலாக அணி சேர்கிறது. இது இத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடி எண் எஸ். ஆர். 7155-லிருந்து பெயர்த் தெடுத்து அச்சாக்கப்பட்டுள்ளது. இந்நூலை ஊறை விஜயராகவப் பிள்ளை என்னும் பெரும் புலவர் இயற்றியுள்ளார். இதனை இவரின் பெயரனாகிய அரசுப் பிள்ளை அவர்கள் பழைய பிரதிகளோடு ஒப்பு நோக்கி எழுதியுள்ளார். பிறகு இவருடைய குமாரர் திரு. ஏ. விஜயராகவப் பிள்ளை இதனை அச்சில் பதிப்பிக்கும் வண்ணம் மீள எழுதியுள்ளார். மேற்காணும் குறிப்புக்கள் சுவடியின் தொடக்கத்தில் எழுதப்பட்டு காணப்படுகின்றன.

இச்சுவடியைப் பதிப்பிக்க எண்ணி, இவ்வரும் பணியைக் கல்விக் கடல், கம்பராமன் திரு. எஸ்.கே. இராமராஜன் அவர்களிடம், இத் துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தம் பணிக் காலத்தில் ஒப்படைத்தார். திரு. இராமராஜன் அவர்கள் தமக்கு ஒப்படைத்தப் பணியைப் பெரும் சமயப் பணியாக எண்ணி உரிய குறிப்புக்களோடு பதிப்பிப்பதற்கு ஆக்கம் செய்து தந்தார். அன்னாருக்கும் முன்னாள் இயக்குநருக்கும் இத்துறை நன்றி தெரி வித்துக் கொள்கிறது. இந்நூலை அச்சாக்குவதற்குப் போதிய நிதி வசதி செய்து தந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர்

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கும், தமிழக அரசு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. க. பொன்னுசாமி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு சா. பா. இளங்கோவன் இ.ஆ.ப. அவர்களுக்கும் இத்துறை பெரிதும் கடப்பாடு உடையது. இந்நூல் வைணவ சமயம் சார்ந் தார்க்கு மிக அரிய நூலாகவும், பொதுமக்கள் வைணவ ஆழ்வார் களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு சிறந்த துணை நூலாகவும் வைணவ சமயம் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு இன்றியமையாத ஒரு கருவி நூலாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயன்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

நடன. காசிநாதன்

# முன்னுரை

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்பு அமைதியாக வாழ்ந்த தமிழர்கள் நூற்காட்சியாலும் யோகக்காட்சியாலும் பரம்பொருளைக் கண்டனர். அப்பரம்பொருளை 'மாயோன்' என்றும் 'சேயோன்' என்றும் போற்றிப் பரவசப்பட்டனர்.

எல்லாம் கடந்து நிற்கின்ற நிலையிலுள்ள பரம்பொருளைச் 'சேயோன்' என்னும் பெயராலும், சூரியனை உள்ளிட்ட பிரபஞ்சங்களிலும், பலகோடி ஆன்மாக்களின் இதயங்களிலும் கலந்து நிற்கிற நிலையில் உள்ள பரம்பொருளை மாயோன் என்றும் போற்றி வழிபட்டு உய்ந்தனர்.

'சேயோன்' என்ற பெயராலும் 'மாயோன்' என்ற பெயராலும் தமிழர்கள் வணங்கியது ஒரே பரம்பொருளைத்தான்.

ஆழ்வார்கள் அனைவருக்கும் சுடர் விளக்காக பொலிந்து நின்றது பரிபாடல்தான். [இந்நூலினுடைய திட்பத்தையும் நுட்பத்தையும் வைணவ உலகம் அறியும்படிச் செய்த பெரியவர் அபிநவ நம்பிள்ளையாகிய கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களே. அவரைப் 'பரிபாடற்பெருக்கர்' என்றும் கூறலாம்.] பரிபாடல்,

ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால் வழக்கு அருநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வெவ்வேறு பெயரோய்

என்று இறைவனின் ஒருமைத் தன்மையைத் தெளிவுற விளக்குகிறது.

பரிபாடலின் மரபில் வந்த சான்றோர்களே ஆழ்வார்கள். இவர்கள் தமிழகத்தில் தோன்றிய காலத்தில் மக்கள் செல்வ நலனும், அறிவு நலனும் ஒருங்கே பெற்றிருந்தனர்.

தமிழர்கள் நிலையைச் செழிக்கச் செய்வதற்காக இப்பெருமக்கள் வாழ்வாலும் வாக்காலும் செய்த தொண்டுகள் அளவிட முடியாதவை.

அறிஞர்களுக்கு மாத்திரம் புலப்பட்டுப் பிறர்க்கு அறிய வொண்ணாதபடி இருந்த மகோன்னதமான தத்துவங்களைப் பேதையும் பெண்ணும் அறியச் செய்த இப்பெரியார்களை வாயார, மனமாரப் போற்றிப் பூரித்தது தமிழகம்.

இவ்வாழ்வார்களின் பாசுரங்களைப் பெற்ற திருமாலுக்கு ஏற்றமும் தோற்றமும் உண்டாயிற்று. ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தாலும் அந்த தேசம் திவ்ய தேசமாயிற்று.

ஆழ்வார்களில் முதலில் தோன்றியவர் பொய்கை, பூதன், பேயார் என்னும் சான்றோர்கள் ஆவார்கள். இவர்களுடைய வெண்பாக்கள் இனிமையும் நீர்மையும் கலந்து கற்போர்க்குப் பேரின்பத்தை வழங்குவன.

முதலாழ்வார் மூவர்களுக்குப் பிறகு அவதரித்தவர் திருமழிசை ஆழ்வார். இவர் வெண்பாக்களாலும், சந்த விருத்தங்களாலும் எம்பெருமானுக்குப் பேரின்பத்தை வழங்கியவர்.

பெருமக்கள் நால்வரும் சென்ற நெறியைப் பின்பற்றி விருத்தத்தாலும், வெண்பாக்களாலும் ஆசிரியப் பாவாலும் கவிதை இசைத்தவர் நம்மாழ்வார். இவருடைய விருத்தங்களின் நடையையும் சொல்லமைப்பையும் பார்க்கின்றவர்களுக்கு அதனுடைய பழமை புலனாகும். முதன் முதலில் இயற்றப்படுகிற பாக்கள் - யாப்பு வகையால் நிறைவு பெறாமல் இருப்பது இயற்கையே. இவ் இயற்கைத் தன்மையைத் திருவாய்மொழியில் காணலாம்.

நம்மாழ்வார் ஆன்ம யாத்திரையில் கண்ட 'பேரின்பங்கள்' தாயார் பாசுரங்களாக வெளிவந்தன. தாயார் பாசுரங்களின் திட்ப, நுட்பம் உணர வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஆசாரிய இதயம் என்னும் நூலைப் பயிலவேண்டும். இறைவனைப் பிரிந்த ஆன்மா, அவனை அடைவதற்காகச் செய்கின்ற முயற்சியும் வெற்றியும் பிறவும் திருவாய்மொழிபோல் விளக்கிய நூல்கள் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

நம்மாழ்வாரின் திருவடியே சார்பாக இருந்து தம் தனித் தன்மையை மறந்து வாழ்ந்தவர் மதுரகவியாழ்வார். இவர் சென்ற

நெறியை "மதுரகவி தோன்றக் காட்டும் தொல்நெறி" என்று வேதாந்த தேசிகர் பணிப்பர்.

நம்மாழ்வாருக்குப் பிறகு தீஞ்சுவைக் கவிதை வழங்கியவர் குலசேகரர். இவருடைய கவிதைகள் உணர்வுப் பிழம்பாக இருப்பவை.

இப்பெருமகனாரின் பக்தியும், பேருணர்வும் வேறெங்கும் காண ஒண்ணாதவை. கண்ணபிரானை வளர்க்கும் பேறு பெற வில்லை என்றும், அவன் விளையாட்டைக் காணும் பேறு பெற வில்லை என்றும், தேவகி புலம்பிய புலம்பல் கல்நெஞ்சையும் கரைக்கும் தன்மையன.

கண்ணா! உன் தகப்பன் யார் என்று கேட்கிறார்கள். அப் போது உன்விரல் நந்தனை அல்லவா சுட்டிக் காட்டுகிறது. அந்தப் பேற்றை "நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே!" என்று புலம்புவது யாரைத்தான் உருக்காது.

குலசேகரருக்குப் பிறகு பெரியாழ்வார் தோன்றினார். இப்பெரியார் எளிய தமிழால் இறைவனை மண்ணுலகில் விளையாடச் செய்தவர். இவருடைய திருப்பல்லாண்டு பரிவின் மிகுதியினால் எழுந்தது. இத்திருப்பல்லாண்டு 'ஆழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம் ஆதி' என்றும், வேதத்திற்கு ஓங்காரம் போல் ஆழ்வார்களின் செந்தமிழுக்குச் சுருக்காய் இருப்பது என்றும் நம் பெரிய ஜீயர் திருவாய் மலர்ந்தருளினார்.

இப்பெரியாழ்வாரின் அரும்பெருந்தவமே நிலமகளை ஆண்டா ளாக அவதரிக்கச் செய்தது. இவ் அம்மையாரின் பெருமையை சக்கரவர்த்தியாகிய கிருஷ்ணதேவராயர் உணர்ந்தார். உருகினார். தன்னை மறந்தார்.

கவிச்சக்கரவர்த்தியும் புவிச்சக்கரவர்த்தியுமான இராயர் அவர் களின் இதயப் பிரேமையே 'ஆமுக்த மால்யத' எனும் பெயரால் வெளிப்போந்தது.

இந்நூலைப் பன்மொழிப்புலவர், நாவேந்தர் மு.கு.ஜெகந்நாத ராஜா அவர்கள் தெளிவான உரைநடையில் மூலத்தோடு தமிழர்

கட்கு வழங்கியிருக்கிறார்கள். இந்நூலாசிரியருக்குத் தமிழகம் கடன்பட்டுள்ளது.

திருவரங்கத்தை அலங்கரிக்கின்ற ஸ்ரீமதி பிரேமா நந்தகுமார் என்னும் அம்மையார் 'ஆமுக்த மால்யத'வை தம் புலமை நலம் தோன்ற ஆங்கிலத்தில் விளக்கி, மேனாட்டாருக்கு ஞான வெளிச்சத்தை வழங்கினார்கள்,

ஸ்ரீமதி பிரேமா நந்தகுமாரின் தாயாரும், சீதாயனம் என்னும் புனிதப் பெருநூலின் ஆசிரியர் கே. ஆர். சீனிவாச ஐயங்கார் அவர் களின் துணைவியுமான பத்மாசனி அம்மையார் தம் புதல்வி இயற்றிய ஆங்கில விமர்சன நூலை, செம்மையும் இனிமையும் கலந்த செந்தமிழில் வழங்கியிருக்கிறார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய பெருஞ்சோதியான பெரியாழ் வாரின் மரபைச் சேர்ந்த தொண்டரடிப்பொடி ஆழ்வார் 'திருமாலை' வழங்கினார். திருப்பள்ளி எழுச்சி முழங்கினார்.

பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் இத்திருமாலைக்கு வழங்கிய பேருரையின் மாண்பை எவராலும் விவரிக்க ஒண்ணாது.

தொண்டரடிப்பொடி ஆழ்வாரை ஒட்டி உறையூரில் அவதரித் தவர் திருப்பாணாழ்வார். இவர் பாடியது ஒரு பதிகமே. இப்பதிகம் வேதாந்த தேசிகரின் இதயத்தை உருக்கியிருக்கிறது.

கவிஞர்கட்கும் தருக்கம் புரிகின்றவர்களுக்கும் சொப்பன சிம்ம மாக இருந்த வேதாந்த தேசிகர், 'பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருள் என்றே பரவுகின்றோம்' என்று அடித்துப் பேசுகின்றார். நாம் சிங்கக் குட்டியாக இருந் தாலல்லவா சிங்கத்தின் பாலின் சுவை உணர முடியும்.

ஆழ்வார்களில் இறுதியில் தோன்றியவர் திருமங்கையாழ்வார். இவருடைய பாசுரங்கள் செழித்த நிலத்தில் தருக்கி வளர்ந்த கற்பக மரம் போன்றவை. இவருடைய பாசுரங்கள் செறிவும், தெளிவும், நிறைவும் ஒருங்கே பெற்றவை. இவரைப் பற்றி எவ்வளவு புகழ்ந் தாலும் அவையெல்லாம் போதா. இவரது தமிழில் கடலின் ஆழத்

தையும் மலையின் உயர்ச்சியையும் ஒருங்கே காணலாம். இவர் திருமடலில் புலமை மழை பொழிந்திருக்கிறார்.

சிலர். பெண்கள் மடல் ஊரக் கூடாது என்று தொல்காப்பியமும் வள்ளுவமும் பேசின என்றனர். ஆழ்வாருக்குக் கோபம் வந்தது, "நன்றறிவாரில் கயவர் திருவுடையார் நெஞ்சத்து அவலம் இலர்" என்னும் திருக்குறளைச் சார்பாகக் கொண்டு பாடிய திருமடலின் அடிகள் அவருடைய புலமையையும் தெளிவையும் புலப்படுத்துகின்றன.

உமாதேவியார் தவம் செய்து சிவபெருமானுடைய திருத்தோளைத் தழுவிக்கொண்டாளே அது உங்கட்குத் தெரியாதா? என்று கூறுமுகத்தான் சிவபெருமானுடைய ஆனந்தக் கூத்தை அழகாகத் தெரிவிக்கின்றார். தமிழ்நாட்டிலே தமிழ்ப் புலமை நடாத்திய தமிழ்க்கடல் இராய. சொ. அவர்கள்; இந்த வரிகளைச் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவார்.

மன்னும் மலையரையன்
　　பொற்பாவை வாள்நிலா
மின்னும் மணிமுறுவல்
　　செவ்வாய் உமையென்னும்
அன்ன நடைய
　　அணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப்
　　புலனைந்தும் நொந்தகலத்
தன்னுடைய கூழைச்
　　சடாபாரம் தான்தரித்து ஆங்கு
அன்ன அருந்தவத்தின்
　　ஊடுபோய் ஆயிரந்தோள்
மன்னுகர தலங்கள்
　　மட்டித்து மாதிரங்கள்
மின்னி எரிவீச
　　மேலெடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலகம் ஏழும்
　　கடந்தும்பர் மேல்சிலும்ப

மன்னுகுல வரையும்
மாருதமும் தாரகையும்
தன்னின் உடனே
சுழலச் சுழன்றாடும்
கொன்னவிலும் மூவிலைவேல்
கூத்தன் பொடியாடி
அன்னவன்தன் பொன்னகலம்
சென்றாங்கு அணைந்திலளே

இவ் அடிகள் முழுமையும் அமுதிற் குளித்துத் தமிழாய் எழுந்த பேரானந்தக் கனியல்லவா! இவருடைய கவிதையில் ஆழங்கால் பட்டவர்கள் மற்றைய ஆழ்வார்களை மறந்து திருமங்கை ஆழ்வாரின் தொண்டராக மாறுவார்கள். திருமங்கை மன்னனின் ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு சித்திரப் பூஞ்சோலை.

பெரிய ஜீயர், திருமங்கை மன்னனின் திவ்யமங்கள விக்கிரகத்தைச் சேவித்துப் பாடிய அனுபூதிப் பாசுரம், தமிழ் உணர்ந்தார் நெஞ்சுக்குப் பேரின்பம் வழங்கும்.

ஆழ்வார்களின் அமுத சொற்களையும், தத்துவங்களையும், இறைநெறியையும் உலகில் பரப்பத் தோன்றிய பேராசிரியர்களே நாதமுனிகளும், ஆளவந்தாரும் இராமானுஜரும் ஆவார்கள்.

மேலே கூறிப்போந்த ஆழ்வார்கள் வரலாற்றையும், தொன் முதுகுரவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிற நூல்களைக் 'குருபரம்பரை' என்று கூறுவர்.

தமிழகத்தில் தோன்றிய குருபரம்பரைகளுக்குள் தலைசிறந்தது பின்பழகிய பெருமாள் ஜீயர், சிந்தித்து, தேர்ந்து மணிகளையும் பவளங்களையும் கோத்தாற்போன்று செய்த குருபரம்பரையாகும். இந்நூலின் சிறப்பை செயற்கருஞ்செயல் செய்து இலக்கிய வரலாற்றைத் திட்பமாகவும் நுட்பமாகவும் வரைந்து, தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்று அகராதித் துறையில் தலைமை தாங்கி, அமரராகிச் சிவபரஞ்சுடரின் திருவடி நிழலில் பேரானந்தப் பெருவாழ்வு பெறும் சிவத்திரு மு. அருணாசலம் அவர்கள், அவ்வப் போது விவரித்துப் பேசுவார். அப்பெருமகனார் வடமொழியையும்

தென்மொழியையும் நன்குணர்ந்தவராதலின் குருபரம்பரையின் நுட்பம் அவரால் அறியமுடிந்தது.

இப்பெருமகனார் தாம் எழுதிய 13-ஆம் நூற்றாண்டுத் தமிழ் வரலாற்றில் இந்தக் குருபரம்பரையை இயற்கை நவிற்சியாகப் போற்றி மகிழ்கிறார்.

''பெரிய புராணம் ஒன்று நீங்கலாக இவ்வளவு நயமும் சிறப்பும் கொண்ட வரலாற்று நூல் எதுவும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு நூல் கிடைத்தது வைணவர்களுக்கு அரிய பேறாகும்''.

இஃது பெருமகனார், குருபரம்பரைக்கு வழங்கிய சிறப்புப் பாயிரம்.

குருபரம்பரையைச் செய்யுள் வடிவில் இயற்றிய சான்றோர்கள் பலர். அவர்களுள் தலை சிறந்தவர் கீழையூர் சடகோபதாசர்.

சடகோபதாசரை அடுத்து நம் சிந்தையில் தோன்றுகிறவர் அழகிய நம்பியாவார். இஃது குருபரம்பரை என்றே வழங்கப்படுகிறது. இந்நூலின் பாடல்கள் எளிமையும் இனிமையும் கலந்து கற்றோரை மகிழச் செய்வன.

மூன்றாவதாகக் குறிக்கத் தக்க நூல் 'பரமயோகி விலாசம்' இதைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை.

நான்காவதாக நம்முன் நிற்கும் நூலாசிரியர் பாகை சீதாராம தாசர். இவர் எழுதிய நூல் 'இராமானுஜ சரிதை'

ஐந்தாவதாகக் குறிப்பிடத்தக்க நூலாசிரியர் ஊறை விசய ராகவன். இவர் இயற்றிய குருபரம்பரை புராணம் 4361 பாடல்களைக் கொண்டது.

மேலே குறிப்பிட்ட நூல்களின் விவரணத்தை நமக்குத் தெரிவித்தவர் திருவல்லிக்கேணி சே. முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் ஆவார்கள். இப்பெருமகனார் பெரும் புலமைச் செல்வம் பெற்றவர். வைணவப் புலமையில் ஈடு இணையற்றவர். இவர் அரிசமய தீபத்தை நல்ல பதிப்பாக வெளியிட்டவர். இவ் அரிசமய

தீபத்தைப் பற்றி இன்றுள்ள வைணவர்கள் அறியார்கள். இந்நூல் வெளிவர வைணவ உலகம் முயல வேண்டும்.

ஈங்கு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் வெளியிடப்படும் குருபரம்பரைப் புராணம் நயமிக்கது பயன்மிகத் தருவது.

இந்தக் குருபரம்பரை புராணத்திற்குரிய மூலப்பிரதி அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது எண் R. 7155.I இந்நூலைப் பற்றி ஒரு சிறு குறிப்பு மூலச்சுவடியில் காணப் பெறு கிறது. இந்நூலின் பிரதி நூலாசிரியரின் பேரன் அரசப்பிள்ளை அவர்களால் பழைய பிரதிகளைப் பரிசோதித்து எழுதப்பெற்றது. இப்பிரதி ஏட்டுச் சுவடிகளாக இருந்ததாகத் தெரிகிறது. இச் சுவடிக்கு மூலமாகப் பல பிரதிகள் இருந்திருக்கின்றன இம்மூலப் பிரதிகளை சே. முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் பார்த்திருக்கலாம். அரசப்பிள்ளை எழுதிய சுவடியைப் பார்த்து அவருடைய புதல்வர் A. விஜயராகவப் பிள்ளையால் மீளவும் காகிதப் படி எடுக்கப்பட் டிருப்பதாகத் தெரிகிறது.

A. விஜயராகவப் பிள்ளையின் சொந்த ஊர் செய்யாறு தாலு காவில் உள்ளது.

அச்சுவடியின் குறிப்பைக் கீழே தருகிறேன் பாருங்கள்;

ஸ்ரீ ராமஜெயம்

ஓம்-நமோ-நாராயணாய-நமவே. ஆழ்வாராதிகள்-அவதார-விஷயமாகிய குருபரம்பரைப் புராணம் - கூரேச விஜயம்

இஃது காஞ்சிபுரத்துக்கடுத்த - ஊறை மாநகரம் என்னும் ஊற்றுக்காடு-கிராமத்தில் இருக்கும் பழமறை வேதியர்குல பரத்து வாசகோத்திரம் கருணீக குலத்திலகனாகிய வித்வ- சிரோமணியாகிய விஜயராகவப் பிள்ளையவர்களால் இயற்றியது. இச்சிறந்த கர்த் தாவின் பவுத்தரனாகிய அரசப் பிள்ளையவர்களால் பழைய பிரதி களைப் பரிசோதித்து எழுதி நிறைவேறியது. இவர் குமாரர் இருங்கல் கிராம கர்ணம் A. விஜயராகவப் பிள்ளையால் அச்சில் பதிப்பிக்க லெட்டரில் எழுதப்பட்டது. செய்யாறு தாலுக்கா N.A.Dt.

பல ஆண்டுகளுக்கு முன்பு திருவாளர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களால் இந்நூல் பதிப்பிக்கும்பேறு எனக்குக் கிடைத்தது. தற்போது தொல்பொருள் ஆய்வுத்துறையில் தலைமை தாங்கி அரும்பணியாற்றிவரும் இயக்குநர், திருவாளர் நடன. காசிநாதன் எம்.ஏ., அவர்களால் இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலின் திட்ப நுட்பங்களை விளக்கின் பெருகும். நூலுட் புகுந்து இதன் அருமை, பெருமைகளை அறிந்து இன்புறுமாறு தமிழ் மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது வெளிவருவது முதற் காண்டம். அடுத்து இரண்டாம் காண்டமும் விரைவில் வெளிவர இறைவன் திருவருளை வேண்டுகிறேன். இந்நூல் வெளிவருவதற்குப் பல்வேறு வகையால் உதவி செய்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பன் நிலையம்
வேலூர் (சேலம்)

இங்ஙனம்
இந்து சமயப் பணியாளன்
S. K. இராமராஜன்
(கம்பராமன்)